## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2017

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ்வதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் வருமானச் செலவினக் கூற்று பின்னிணைப்பு இலக்கம் 01 ஆகவும் நிதியத்திற்குரிய முதலீடு தொடர்பான கூற்று பின்னிணைப்பு இலக்கம் 02 ஆகவும் உள்ளடக்கப்பட்டு நிதியத்தின் நடவடிக்கைகளது நிர்வாகம் தொடர்பான அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின்

நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களினால் அனுமதிக்கப்பட்டாலன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்படக்கூடாததுடன் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தக்கூடாது. எவ்வாறாயினும், அரச வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கொன்றுடன் தொடர்புடைய காசுப் புத்தகத்தின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,739,535 செலவு மீதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் வரவு மீதிகளின் மொத்தத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,929,317 ஆக காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3**

8 விசேட செயற்திட்டங்களுக்கு நள்கொடைகளாக பெறப்பட்ட பணங்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலிடுவதன் மூலம் பெறப்பட்ட வட்டி வருமானம் அந்த நன்கொடையாளர்கள் மற்றும் நிதியத்திற்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அவ்வாறான பகிர்ந்தளிப்பின் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், பயன்பாட்டிற்குக் காணப்படும் போது சொத்தொன்று பெறுமானத்தேய்விடப்படும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக, சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அதன் அகற்றல் திகதியினை புறக்கணித்து கொள்வனவு ஆண்டின் பெறுமானத்தேய்வுக்கான கொள்கையினை பின்பற்றியிராது அகற்றல் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வுக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்காக 2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 4,411,946 தொகையான திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் 2016 ஆம் ஆண்டில் வருமானமொன்றாக கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு தொடர்புடைய வட்டி வருமானம் ரூபா 1,819,579 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட அட்டுறு வட்டி வருமானமொன்றாக கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்காத அதேவேளை அவற்றில் உள்ளடக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வட்டி வருமானம் ரூபா 2,592,367 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய வருமானமொன்றாக மீளக் கணக்கிடப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, 2016 ஆம் ஆண்டில் வட்டி வருமானம் ரூபா 4,411,946 இனால் மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அந்த பிழை மீளாய்வாண்டு வரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 7,701,985 தொகையான திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வருமானம் 2017 ஆம் ஆண்டில் வருமானமொன்றாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அவற்றில் உள்ளடக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வட்டி வருமானம் ரூபா 2,387,390 தொகை 2017 திசெம்பர் உள்ளபடியான பெறவேண்டிய வருமானமொன்றாக மீளக்கணிப்பிட்டப்பட்டிருந்த அதேவேளை அவற்றில் உள்ளடக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய வட்டி வருமானம் ரூபா 1,679,035 தொகை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட்ட அட்டுறு வட்டி வருமானமொன்றாக கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, 2017 ஆம் ஆண்டில் வட்டி வருமானம் ரூபா 4,066,425 இனால் மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானத்தைக் கணிப்பிடுகையில் பிழைகள் காரணமாக ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பெறவேண்டிய வட்டி வருமானக் கணக்கு ரூபா 61,471 இனால் மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டுடன் தொடர்புடைய வட்டி வருமானம் ரூபா 2,080,742 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) திறந்த சந்தைக்கு 10 புதிய ஆயுர்வேத பொருட்களின் அறிமுகம் மற்றும் மேம்படுத்தல் மீதான செயற்திட்டத்திற்கு ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 15 மில்லியன் நிதி உதவியொன்றை நிதியம் அளித்திருந்ததுடன் குறித்த கூட்டுத்தாபனம் அதற்காக நிதியத்திற்கு அந்தப் பொருட்களின் விற்பனையிலிருந்து உழைக்கப்பட்ட இலாபத்தின் 10 சதவீதத்தினை செலவுவைப்பதற்கு இணங்கியிருந்தது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 266,748 தொகையான இலாபப் பங்கு ஆண்டின் வருமானமொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை தேசிய கண் வங்கியினால் மீளாய்வாண்டில் ஏற்றுமதிசெய்யப்பட்ட கண் சவ்வுகள் சிதைவடைந்திருந்தமை காரணமாக ஏற்பட்ட ரூபா 649,119 நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு திரண்ட நிதி மற்றும் நன்கொடையான மானியக் கணக்கின் மீதிகள் முறையே ரூபா 275,076,121 மற்றும் ரூபா 550,586,924 தொகையினை தனித்தனியாக காட்டுவதற்குப் பதிலாக இரண்டு கணக்குகளின் ரூபா 825,663,045 கூட்டுத்தொகை திரண்ட நிதிக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு | ஏதேனும் தொகையொன்றின் முதலீடு அமைச்சரின் வழிகாட்டல்களுடன் நிதியத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 403,639,949 மற்றும் ரூபா 496,352,400 தொகைகள் அமைச்சரின் வழிகாட்டல்களின்றி 2017 திசெம்பர் 31 இல் அளவில் முறையே நிலையான வைப்புக்கள் திறைசேரி உண்டியல்களில் நிதியத்தினால் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 246(1) | ஒவ்வொரு செலுத்துகையும் பணம் பெறுபவரிடமிருந்து பற்றுச்சீட்டொன்றின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டிய போதிலும், 2017 ஆகஸ்ட் 24 இல் நடாத்தப்பட்ட இரத்த நன்கொடை முகாமில் படைவீரர்கள் பங்குபற்றியதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அளிக்கப்பட்ட ரூபா 700,000 முற்பணத்திற்கு பற்றுச்சீட்டொன்று பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | செயல்நிமித்த உபகட்டுநிதி அது அளிக்கப்பட்ட நோக்கம் பூர்த்தியானதன் பின்னர் உடனடியாக தீர்ப்பனவுசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் அரச வைத்தியசாலைகள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகம் மற்றும் தேசிய இரத்தம் ஏற்றும் சேவைகளுக்கு 9 சந்தர்ப்பங்களில் அளிக்கப்பட்ட ரூபா 13,815,000 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி நோக்கம் பூர்த்தியானதன் பின்னர் 2 மாதங்கள் தொடக்கம் 8 மாதங்கள் வரையான தாமதமொன்றுடன் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(5) | ஏதேனும் முறையில் ஒப்படைக்கப்பட்ட உபகட்டுநிதியொன்றின் மீதி, உபகட்டுநிதி விநியோகிக்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 இனை விட தாமதமடைதல் கூடாது. இருப்பினும், மீளாய்வாண்டில் 5 சந்தர்ப்பங்களில் 3 அரச வைத்தியசாலைகள் மற்றும் தேசிய இரத்தம் பாய்ச்சல் சேவைக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 2,587,000 உபகட்டுநிதிகள் 2018 சனவரி மற்றும் மார்ச்சில் தீர்ப்பனவுசெய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | நிதியமைச்சின் 2015 மே 15 எம்எவ்01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | வெளிநாட்டுப் போக்குவரத்திற்கு ஏற்பட்ட செலவினங்களின் மீளளிப்புக்கு முன்னர் விமானத்தின் விபரங்கள், விமானப் பயணச் சீட்டு மற்றும் கடவுச்சீட்டின் பிரதியொன்று போன்ற ஆவணங்களினூடாக செலவினத்தின் துல்லியத்தன்மை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், ஜெனீவாவில் நடாத்தப்பட்ட கண்காட்சியொன்றில் பங்குபற்றுவதற்கு வைத்திய அதிகாரியொருவரினால் செலவிடப்பட்ட ரூபா 800,000 தொகையொன்று செலவினத்தின் அவ்வாறான உறுதிப்படுத்தலின்றி மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டினை அதற்கு முன்னைய ஆண்டிற்கான ரூபா 424,408,118 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 137,277,233 மிகையொன்றினை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 287,130,885 பற்றாக்குறையொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டில் பல்வேறு செயற்திட்டங்கள் மீதான செலவினம் ரூபா 304,600,597 இனால் அதிகரித்தமை மற்றும் வருமானம் ரூபா 17,469,713 மாத்திரம் அதிகரித்தமை மேற்குறித்த சரிவுக்கு பிரதான காரணமாக காணப்பட்டிருந்தது.

2013 ஆம் ஆண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 46,900,783 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்ட போதிலும், 2014 ஆம் ஆண்டில் அது ரூபா 49,171,867 மிகையொன்றிற்கு மாற்றப்பட்டதுடன் அந்த மிகைகள் 2015 ஆம் ஆண்டில் ரூபா 6,443,292 இற்கு குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் மிகைகள் ரூபா 424,408,118 இற்கு அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த மிகைகள் ரூபா 137,277,233 இற்கு குறைவடைந்திருந்தது. மேலும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நிதிசார் விளைவுகளுக்கான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளசரிப்படுத்துகையில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 45,800,448 எதிர்மறைப் பெறுமதியொன்றுக்கு நிதியத்தின் பங்களிப்பு எடுக்கப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டில் அது ரூபா 50,804,915 நேர்ப்பெறுமதியொன்றுக்கு முன்னேற்றமடைந்து காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் ரூபா 8,333,801 பங்களிப்பு 2016 ஆம் ஆண்டில் ரூபா 426,527,547 இற்கு அதிகரித்துக் காணப்பட்ட போதிலும், 2017 ஆம் ஆண்டில் அது ரூபா 139,490,978 இற்கு குறைவடைந்து காணப்பட்டது.

ஒவ்வொரு வருடத்திலும் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு பெறப்பட்ட அன்பளிப்புக்கள் மற்றும் ஏனைய மானியங்கள் அந்த ஆண்டுகள் ஒவ்வொன்றினதும் வருமானமொன்றாகக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பணங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், நிதிசார் விளைவுகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பிரகாரம், நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளினை அடைந்துகொள்வதற்கு மற்றும் செயலாற்றுவதற்கு மற்றும் நிதியத்தின் பொது நிதிக்குச் சொந்தமாகவுள்ள பணங்களிலிருந்து சட்டத்தின் 07 ஆம் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளுக்கான நோக்கங்களின் பிரகாரம்

செயலாற்றலினை அடைந்துகொள்வதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், நிதியம் ஆரம்பித்ததிலிருந்து எவ்வித செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 தொழிற்பாடும் மீளாய்வும்

நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் சுகாதார பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்களில் நிலவும் பெரும்பாலான குறைபாடுகளைக் குறைப்பதற்கு நிதியத்தின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அந்நிறுவனங்கள் அறிவுறுத்தப்படமை மற்றும் அறிவிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் நிதியத்தின் நோக்கங்கள் போதியளவில் அடையப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டுகளின் போதும் நிதியத்திற்குச் சொந்தமான பொது நிதியத்தில் காணப்பட்ட ஆண்டிற்காக பயன்படுத்தக்கூடியதாக இருந்த நிதி முறையே ரூபா 276,654,645, ரூபா 261,124,443, ரூபா 295,194,406, ரூபா 358,057,285 மற்றும் ரூபா 387,348,583 ஆக இருந்தது. அதில் 62 சதவீதம், 79 சதவீதம், 82 சதவீதம், 77 சதவீதம் மற்றும் 72 சதவீதம் நிதியத்தின் நோக்கங்களுக்காக முறையே பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதிய சட்டத்தினால் வெளிவாரி நிறுவகமொன்றுக்கு கடன்களினை அளிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்காத போதிலும், இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 10 மில்லியன் வட்டியில்லாத கடனொன்று அளிக்கப்பட்டிருந்தது. கடன் விநியோகித்த திகதியிலிருந்து 2 வருடங்களுக்குள் 24 தவணைகளில் கடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவேண்டியதுடன் மீளாய்வாண்டின் போது அறவிடத்தக்க 7 கடன் தவணைகள் அல்லது ரூபா 2,905,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறுவர்களுக்கான சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு அதிதீவிர சிகிச்சை அலகொன்றினை உள்ளடக்கிய பத்து மாடிக் கட்டிடமொன்றின் நிர்மாணத்திற்கு "சிறிய இதயங்கள்" "Little Hearts" எனும் பெயரின் மூலம் விசேட செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு 2017 பெப்ரவரி 17 இல் சுகாதார அமைச்சு, குழந்தை மருத்துவர்களின் கல்லூரி மற்றும் நிதியத்தினூடாக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. அந்தத் திகதியிலிருந்து அதற்கு பேணப்பட்ட கணக்கொன்றில் ரூபா 214.5 மில்லியன் தொகையான நிதிகள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது அதற்கு ரூபா 30 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் 3.15 மற்றும் 3.16 இலக்க பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசனையாளர்களின் நியமனத்துடன் தொடர்புடைய இரண்டு நிபந்தனைகளுக்குப் பதிலாக இலங்கை கடற்படை மற்றும் ஆலோசனை சேவைக்கு ஒதுக்கப்பட்ட நிர்மாணங்கள் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக புரிந்துணர்வு உடன்படிக்கை திருத்தப்பட வேண்டுமென 2017 ஏப்ரல் 05 இல் தீர்மானமொன்றினை அமைச்சரவை மேற்கொண்டிருந்தது. இருப்பினும், உடன்படிக்கை அவ்வாறு திருத்தஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பாதுகாப்பு அமைச்சுடன் சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் ஒருங்கிணைப்பினூடாக ஒருங்கிணைந்த செயற்திட்டமொன்றாக செயற்பட செயற்திட்டத்திற்கு 2017 நவம்பர் 01 இல் அமைச்சரவையின் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைகளுக்கு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கிடையே மற்றும் நிர்மாணங்களுக்கு சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் இலங்கை கடற்படைக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை தேசிய கண் வங்கியின் ஸ்தாபிப்பிற்கு சிங்கப்பூரின் ஆசிய கொரேனா பவுண்டேசனுடன் (Asia Cornea Foundation) 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் 13/1172/509/052 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2013 ஆகஸ்ட் 29 இல் பெறப்பட்ட அங்கீகாரத்தின் உறுப்புரைகளின் பிரகாரம், சட்டமொன்றின் மூலம் தனியான நிறுவனரீதியான கட்டமைப்பொன்றுடனான அலகொன்றாக இலங்கை தேசிய கண் வங்கி ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் அவற்றிற்கான கொடுக்கல் வாங்கல்களினைப் பதிவுசெய்வதற்கு தனியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 31 வரையிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீகஹகிவுல வைத்தியசாலையின் விடுதி தொகுதியினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த வேலைகள் முறையாக மற்றும் ஒழுங்காக வெளிப்படுத்தப்பட்டிருக்காமையினால், ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் பூர்த்தியின் பின்னர் 7 வருடங்களுக்கும் மேலதிகமான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், குறித்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய காப்புறுதி கம்பனியொன்றிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவேண்டிய ரூபா 1,372,346 செயலாற்றல் பிணை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிதியமைச்சின் இணக்கப்பாட்டுடன் அளிக்கப்பட்ட தொடர்புடைய அமைச்சரின் அங்கீகாரமின்றி எவ்வித பணமும் முதலீடு செய்யப்படக்கூடாது. எவ்வாறாயினும், நிதியம் அவ்வாறான அங்கீகாரமின்றி 2016 ஒக்தோபர் 18 இலிருந்து அரச வங்கியொன்றில் சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. அதே வங்கியில் செயற்படுத்தப்பட்ட நடைமுறைக் கணக்கில் தினமும் ரூபா 250,000 மட்டமொன்றிலான மீதியினைப் பேணுதல் மற்றும் வட்டியினை உழைக்கும் எண்ணத்துடன் சேமிப்புக் கணக்கிற்கு மிகைப் பணத்தினை மாற்றுவது நோக்கமாகக் காணப்பட்டது. இருப்பினும், நடைமுறைக் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் போது 27 சந்தர்ப்பங்களில் ரூபா 250,000 இனை மிகைத்திருந்ததுடன் அந்த சந்தர்ப்பங்களில் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 303,404 தொடக்கம் ரூபா 42,750,000 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) நிதியத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேசிய இரத்த வங்கி மற்றும் தேசிய இரத்த வங்கியின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான உடனடி நிதிசார் தேவைகளுக்கு மாத்திரம் நிதிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். அந்த நிபந்தனைகளிலிருந்து விலகிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படக்கூடாது. எவ்வாறாயினும், குறித்த நோக்கத்திற்கு முரணாக, மீளாய்வாண்டில் தேசிய இரத்த நன்கொடை தினத்தினை நடாத்துவதற்கு தேசிய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியிலிருந்து ரூபா 3,985,114 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

(இ) 06 மாதங்கள் காலப்பகுதியொன்றிற்கு மாத்திரம் பரிந்துரைக்கப்பட்ட இந்திய கம்பனியொன்றுக்கு தேசிய இரத்தம் ஏற்றும் சேவையினால் உரிமையைக் கொண்டுள்ள மிகை இரத்த பிளாஸ்மாக்களினை (Plasma) விற்பனை செய்வதற்கு 2015 ஆகஸ்ட் 07 இல் அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த காலப்பகுதியின் இறுதியில் போட்டி விலைக்கேள்வியினை அழைப்பதன் மூலம் பொருத்தமானதொரு கொள்வனவாளர் தெரிவு செய்யப்படல் வேண்டும். தேசிய இரத்த பரிமாற்றல் சேவை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 14,666.8 வீற்றர் இரத்த பிளாஸ்மயினை விற்பனை செய்திருந்ததுடன் அவற்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 50,925,364 தொகை தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட தேசிய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆகஸ்ட் 07 இலிருந்து 6 மாதங்கள் காலப்பகுதியொன்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட இந்திய கம்பனிக்கு இரத்த பிளாஸ்மா விற்பனை செய்யப்பட்டிருக்காததுடன் 6 மாதங்கள் காலப்பகுதியின் பின்னர், போட்டி வலைமனுவினை அழைக்கும் நடைமுறையினை 2016 மார்ச் தொடக்கம் 2016 யூலை வரையான காலப்பகுதியின் போது ரூபா 12,174,184 தொகையொன்றிற்கு குறித்த பரிந்துரைக்கப்பட்ட கம்பனியின் உள்ளூர் முகவர்க்கு 4,650.8 மீற்றர் இரத்த பிளாஸ்மா விற்பனை செய்யப்பட்டிருந்தது. குறித்த கம்பனி தெரிவுசெய்யப்பட்ட விதம் தொடர்பான தகவல் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) போட்டி விலைமனுக்களினை அழைப்பதன் மூலம் பொருத்தமானதொரு கொள்வனவாளர் தெரிவுசெய்யப்படவேண்டுமென்ற 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக, போட்டி விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பான நடைமுறையிலிருந்து விலகுவதற்கு மற்றும் வரையறுக்கப்பட்ட விலைகூறலினை (Quotations) அழைப்பதன் மூலம் கொள்வனவாளரொருவரை தெரிவுசெய்வதற்கு 2017 சனவரி 19 இல் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் அங்கீகாரம் அளித்திருந்தார். அதற்கமைய, 2017 ஆம் ஆண்டில் ரூபா 38,751,180 தொகையொன்றிற்கு மற்றுமொரு கம்பனிக்கு 10,016 லீற்றர் இரத்த பிளாஸ்மா விற்பனை செய்யப்பட்டிருந்தது.

(iii) இரத்த பிளாஸ்மாவின் விற்பனையிலிருந்து உழைக்கப்பட்ட பணங்கள் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படவேண்டிய போதிலும், அவ்வாறு செய்வதற்குப்பதிலாக, அது நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட தேசிய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு முறையான அதிகாரமின்றி செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iv) இரத்த பிளாஸ்மா கொள்வனவுக் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட காசோலைகள் தேசிய வங்கி பரிமாற்ற சேவைகளின் பெயரில் பெற்றிராது நிதியத்தின் பெயரில் பெறப்பட்டிருந்தது.

(v) குறித்த காசோலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் இரத்த பிளாஸ்மா விற்பனையிலிருந்து பெறப்பட்ட பணங்களுக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தேசிய இரத்த பரிமாற்ற சேவையின் தேவைப்பாடுகளுக்கு நிதியத்திற்கு தொடர்புடைய கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நன்கொடையொன்றின் முன்உரையின் (Pretext of a donation) அடிப்படையில் பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(vi) 1981 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 13(4) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் நோக்கங்களுக்கு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகளின் மொத்தப் பெறுமதி மீதான வரியிலிருந்து நன்கொடையாளர் விதிவிலக்களிப்புக்கு தகுதியுடையவராகின்றார். ஆகையினால், இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் கூட இழக்கப்பட்டிருந்தது. அதற்காக அந்தக் கம்பனிக்கு நிதியம் உதவியளித்திருந்தது.

(ஈ) நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளுக்கு பொருத்தமாக நன்கொடைகளினை மேற்கொள்வதற்கு அடிப்படையொன்று அல்லது குறித்துரைக்கப்பட்ட கொள்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதியத்தினால் பல்வேறு சமூகங்கள் மற்றும் நிறுவகங்களுக்கு காசு நன்கொடைகளினை மேற்கொள்கையில், நிகழ்வுகளினை நடாத்துவதற்கான மண்டப கட்டணங்கள், அலங்காரங்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பிரயாணங்கள் மீதான செலவினங்கள், போக்குவரத்துச் செலவினங்கள், உணவு மற்றும் ஹோட்டல் விடுதிகள் போன்ற செலவினத்திற்கு, தேசிய சுகாதார அபிவிருத்தி நியமத்தின் 7 ஆம் பிரிவில் மேற்கோள்காட்டப்பட்ட தொழிற்பாடுகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்டிருக்காத தொழிற்பாடுகளுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 27,692,615 தொகையொன்று நன்கொடைகளாக வழங்கப்பட்டிருந்தது.

**4.4 நிதிகளின் குறைப்பயன்பாடு**

ஏழு குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு பெறப்பட்ட ரூபா 8,160,291 அன்பளிப்புக்கள் 4 மற்றும் 30 வருடங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களினை அடைந்துகொள்ளல்**

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு செயலாளரினால் விநியோகிக்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் “2030 நிகழ்ச்சி நிரல்” பற்றி நிதியம் அறிந்திருக்கவில்லை. ஆகையினால், அவர்களின் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அந்த இலக்குகளினை அடைவதிலுள்ள திருப்புமுனைகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அந்த இலக்குகளினை அடைந்துகொள்வதற்கான குறிகாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை**

**6.1.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹரகம, அபேக்ஸா வைத்தியசாலைக்கு PET CT ஸ்கேனர் ஒன்றின் பெறுகையின் விநியோகம், ஸ்தாபிப்பு, பரீட்சிப்பு மற்றும் தொழிற்பாட்டிற்கு 2017 சனவரி 01 அளவில் வெளிப்புற நிறுவனமொன்றுடன் இணைந்து ரூபா 302,235,122 பொது

நிதிகள் திரட்டப்பட்டிருந்ததுடன், 2018 மார்ச் 30 அளவில் அந்த நிதிகளில் ரூபா 179,013,000 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) PET CT ஸ்கேனரின் கொள்வனவுக்கு வெளிப்புற அமைப்பொன்றுடன் இணைந்து பொது நிதிகளினை திரட்டுவதற்கு மற்றும் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் பெயரில் வங்கியில் அந்தப் பணங்களினை வைப்புச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட முன்மொழிவொன்றை தயாரிப்பதற்கோ அல்லது சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் என்பன அதற்காக இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) விநியோகத்தரினால் வழங்கப்பட்ட PET CT ஸ்கேனரின் மூலநாட்டுச் சான்றிதழ் (Country Origin Certificate) மற்றும் துறைமுகம் மற்றும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனுமதி ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், வழங்கப்பட்ட இயந்திரம் ஐக்கிய அமெரிக்காவின் தொடர்புடைய தாய் கம்பனியின் புதிய உற்பத்தியொன்றாகக் காணப்பட்டதா என்பதை, கணக்காய்வில் உறுதிப்படுத்தமுடியாது காணப்பட்டது.

(iii) விநியோகஸ்தரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலின் பிரகாரம், ரூபா 36,314,377 ஆன உள்ளுர் கட்டணங்களினை அறவிடுவதன் மூலம் விநியோகிக்கப்பட்டமை காரணமாக எந்தவிதமான உதிரிப்பாகங்கள் என்ற ஆவணரீதியான சான்று அத்துடன் அவை இயந்திரத்துடன் பெறப்பட்டிருந்தனவா என்பன கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2018 ஏப்ரல் 01 இல் பொதுமக்களுக்கு இயந்திரம் திறக்கப்பட்டுக் காணப்பட்ட போதிலும், 9.1 மற்றும் 9.2 ஆம் விபரக்குறிப்பிரைகளின் பிரகாரம், PET CT ஸ்கேனரின் தொழிற்பாட்டிற்கான தொடர்புடைய உத்தியோகத்தர்களின் பயிற்சி 2018 செப்தெம்பர் 20 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், PET CT ஸ்கேனரின் சேவையினைப் பெறமுடியாது காணப்பட்டது.

(ஆ) மென்பொருளின் கொள்வனவு, பரீட்சிப்பில் பயன்படுத்தப்படும் கண்ணாடிசார்ந்த நுண்ணோக்கி (Specular Microscope) மற்றும் கண் நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விழிவெண்டபலங்களையுடைய தரத்தினை தரப்படுத்தல் போன்றவற்றிற்கு நியமத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட இலங்கை கண் வங்கி கணக்கிலிருந்து மீளாய்வாண்டில் இலங்கை தேசிய கண் வங்கியினால் ரூபா 6,657,713 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அவற்றின் மீது நடாத்தப்பட்ட பரீட்சிப்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் பெறுகைக்கான வழிகாட்டல்கள் மீதான 2.1 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம், விலைமனுதாரர் மூலம் விலைமனுக்களினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் உபகரணங்பளுக்கு அத்துடன் அவற்றின் இறக்குமதிக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவுச் சான்றுப்பத்திரம் பெறப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இந்த விலைமனுவில் மேற்குறித்த தேவைப்பாடு புறக்கணிக்கப்பட்டிருந்தது.

(ii) பெறுகை நிறுவகத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம், விபரக்குறிப்புக்கள் மற்றும் வரைபு விலைமனு ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய,

“கண் வங்கிக்கு விழிவெண்படலங்களுக்கான பரீட்சிப்பு நோக்கத்திற்கு” பெறுகை மேற்கொள்ளப்படுகின்றதென விலைமனு மற்றும் விலைமனு ஆவணங்களுக்கான அழைப்பிதழில் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். இருப்பினும், அது அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 5.6.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், சமமான பண்புகளினைக்கொண்டுள்ள மற்றும் அதில் குறிப்பிடப்பட்டவற்றிற்கு சமமான அதிகுறைந்த கணிசமான செயலாற்றலினை வழங்குகின்ற பொருட்களுக்கான கொடைமுனைவினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதியளிப்பதற்கான தேவைப்பாடு மாறுபட்டிருந்தது.

(iii) நியம விலைமனு ஆவணங்களினைப் பயன்படுத்தாத வேளைகளில், அரச பெறுகை வழிகாட்டல்களின் 5.3.1(ஈ) வழகாட்டல்களின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் பெறுகைக் குழுவினால் பயன்படுத்தப்பட்ட அனைத்து ஏனைய ஆவணங்களும் கட்டாயம் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரச பெறுகை வழிகாட்டல்களின் 2.12(அ) வழிகாட்டலின் பிரகாரம், குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் இரகசியத்தன்மையினை வெளிப்படுத்தல் தொடர்பான கையெழுத்துக்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(v) அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 3.1.1(அ) வழிகாட்டலின் பிரகாரம், பெறுகை முறைமைகளினை தெரிவுசெய்கையில், உள்நாட்டு விநியோகஸ்தர்களின் இயலளவு வரையறுக்கப்பட்டுக் காணப்படுகின்ற போது மற்றும் சர்வதேச போட்டி விலைமனுவினை அழைப்பது தெளிவாகக் காணப்படுகையில், சர்வதேச போட்டி விலைமனுவினை அழைப்பதற்கு அறிவுறுத்தப்படுகின்றது. இருப்பினும், இந்த பெறுகைக்கு சர்வதேச போட்டி விலைமனுக்கள் அழைக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அரச பெறுகை வழிகாட்டல்களின் 8.9.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பெறுகை நிறுவகம் விலைமனுவினை ஏற்றுக்கொண்டதன் பின்னர் அதனுடன் முறையானதொரு ஒப்பந்தமொன்றின் வெளிப்படுத்துகைக்கு முறையானதொரு ஏற்றுக்கொள்ளல் கடிதத்தினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்வேண்டும். இருப்பினும், ஏற்றுக்கொள்ளல் கடிதமொன்றினை வழங்குவதற்கு அல்லது ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 8.12.3 ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம், வழங்கப்பட்ட உபகரணத்தின் விபரக்குறிப்புக்கள் மற்றும் ஏனைய உடன்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் உத்தரவாதங்கள், ஆணைகள், கையேடுகள் மற்றும் பராமரிப்பு சேவைகளின் பிரகாரம் காணப்படுகின்றதென பொறுப்பான அதிகாரி சான்றுப்பத்திரமொன்றை வழங்க வேண்டும். எவ்வாறாயினும், சான்றுப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

(viii) விபரக்குறிப்புக்களின் பிரகாரம், உதிரிப்பாகங்கள் (Supporting Equipment, உபகரணங்கள், LED கணனித் திரை, மென்பொருள் பாதுகாப்பு கருவிகள், தனியாள் கணனி (PC), விசைப்பலகை, சுட்டி) விநியோகிக்கப்படல் வேண்டும். பட்டியலில் அவற்றின் பெறுமதி குறிப்பிடப்பட்டிருக்காததுடன் குறித்த உதிரிப்பாகங்கள் பெறப்பட்டிருந்ததென பொருள் பெறுகைக் குறிப்பில் (GRN) குறிப்பிடப்பட்டுக் காணப்படவில்லை.

**6.1.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதுல்லயிலுள்ள பிராந்திய வைத்தியசாலையில் 2 வைத்திய உத்தியோகத்தர்களின் தங்குமிடத்துடனான கட்டிடமொன்றின் நிர்மாணத்திற்கு நிதியத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 9,801,584 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை மிகைக்கின்ற ஒப்பந்தங்களுக்கு தற்போதைய ஒப்பந்ததாரர்கள் தாமாகவே பதிவாளருடன் பொது ஒப்பந்தமாக தாமாகவே பதிவு செய்தல் வேண்டும். இருப்பினும், ரூபா 9,801,584 மொத்தக் கிரயமொன்றுடன் இந்த ஒப்பந்தம் அளிக்கப்பட்டிருந்த ஒப்பந்ததாரர்கள் தொடர்புடைய ஒப்பந்த உடன்படிக்கைகளுடன் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மத்தி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளரினால் (மருத்துவ சேவைகள்) மதுல்ல பிராந்திய வைத்தியசாலைக்கான அவதானிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட பின்னர் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளருக்கு 2014 செப்தெம்பர் 14 இல் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் பிரகாரம் இந்த வைத்தியசாலைக்கு ஒரு அலுவலக தங்குமிடம் மாத்திரம் வேண்டப்படுகின்றது. எவ்வாறாயினும், 2 அலுவலக தங்குமிடங்களுடனான கட்டிடமொன்றின் நிர்மாணத்திற்கு பணம் செலவிடப்பட்டிருந்தது.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பரப்புகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) நிதி முகாமைத்துவம் | (i) பொது நிதியத்திற்குச் சொந்தமான நிதிகளினைப் பயன்படுத்தும் போக்கினை அபிவிருத்திசெய்யத் தவறியமை. |
| | (ii) குறித்த நோக்கத்திற்கு பெறப்பட்ட பணத்தினை அதற்காகவே பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (ஆ) பெறுகைகள் மற்றும் ஒப்பந்தக் கட்டுப்பாடு | அரச பெறுகைகள் வழிகாட்டல்களினை பின்பற்றத் தவறியமை. |

***வருமான மற்றும் செலவினக் கூற்று***

-----------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் வருமானம் மற்றும் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | **2017** | | **2016** | |
| | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** | **ரூபா.** |
| **வருமானம்** | | | | |
| ஜாதிக சம்பத லொத்தர் வருமானம் | 48,480,128 | | 69,611,040 | |
| நன்கொடைகள் | 464,555, 483 | | 430,643,474 | |
| முதலீட்டு வட்டி | 85,613,849 | | 50,513,772 | |
| ஏனைய வருமானம் | 40,373,759 | | 70,785,220 | |
| | -------------- | | -------------- | |
| | | 639,023,219 | | 621,553,506 |
| **செலவினம்** | | | | |
| நிர்வாக செலவினம் | 3,524,610 | | 2,925,352 | |
| நிதிச் செலவினம் | 480,019 | | 145,302 | |
| சுகாதார அபிவிருத்தி செயற்திட்ட செலவினம் | 497,741,357 | | 194,074,734 | |
| | --------------- | | --------------- | |
| | | (501,745,986) | | (197,145,388) |
| | | ---------------- | | ---------------- |
| மிகை | | **137,277,233** | | **424,408,118** |
| | | ========= | | ========= |

**முதலீட்டு கூற்று**

| வங்கி | சான்றிதழ் / உண்டியல்களின் எண்ணிக்கை | முதலீட்டினை புதுப்பித்தல் திகதி | முதலீட்டுக் காலப்பகுதி | 2017 சனவரி 01 இல் உள்ளபடியான மீதி | 2017 ஆம் ஆண்டின் போது முதலீடுகள் | 2017 ஆம் ஆண்டின் போது பற்றுக்கள் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நிலையான வைப்புக்கள் - மக்கள் வங்கி, தம்புள்ளை கிளை** | 13860156415 | 2017/09/30 | 6 மாதங்கள் | 23,000,000 | - | - | 23,000,000 |
| | 13860156406 | 2017/09/30 | 6 மாதங்கள் | 15,000,000 | - | - | 15,000,000 |
| | 13860137749 | 2017/10/08 | 6 மாதங்கள் | 1,500,000 | - | - | 1,500,000 |
| | 13860156424 | 2017/09/30 | 6 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| | 13860156371 | 2017/09/30 | 6 மாதங்கள் | 50,000,000 | - | - | 50,000,000 |
| | 13860156399 | 2017/09/30 | 6 மாதங்கள் | 35,000,000 | - | - | 35,000,000 |
| **நிலையான வைப்புக்கள் - இலங்கை வங்கி, பெருநகர கிளை** | 78651737 | 2017/11/15 | 3 மாதங்கள் | 50,000,000 | - | - | 50,000,000 |
| | 78638673 | 2017/08/10 | 6 மாதங்கள் | 20,000,000 | - | - | 20,000,000 |
| | 78862661 | 2017/12/04 | 3 மாதங்கள் | 42,728,226 | - | - | 47,639,949 |
| | 78965346 | 2016/09/19 | | - | - | 10,419,671 | - |
| | 778651776 (Eye Bank) | 2017/11/15 | 3 மாதங்கள் | 19,000,000 | - | - | 19,000,000 |
| மக்கள் வங்கி, நகர மண்டபக் கிளை | 16760168380 | 29/09/2017 | 6 மாதங்கள் | - | 122,500,000 | - | 122,500,000 |
| | | | | | | | **403,639,949** |
| இலங்கை வங்கி, திறைசேரி உண்டியல்கள் பெருநகர கிளை | 16609 | 22/12/2017 | 182 நாட்கள் | - | - | - | 4,804,230 |
| | 11310 | 01/09/2017 | 182 நாட்கள் | - | - | - | 28,701,270 |
| | 11032 | 25/08/2017 | 182 நாட்கள் | - | - | - | 47,846,900 |
| | 1372458 | 29/12/2017 | 07 நாட்கள் | - | - | - | 155,000,000 |
| | 1370414 | 22/12/2017 | 14 நாட்கள் | - | - | - | 160,000,000 |
| | 1372457 | 29/12/2017 | 32 நாட்கள் | - | - | - | 100,000,000 |
| | | | | | | | **496,352,400** |
| | | | | | | | **899,992,349** |